RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 179 | ஜூலை.4 2025 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## இந்தியா அமெரிக்கா இடையே கையெழுத்தாகிறது 10 ஆண்டு பாதுகாப்பு கட்டமைப்பு ஒப்பந்தம்

புதுடெல்லி: ஜூலை.4-

இந்த ஆண்டு இறுதிக்குள் 10 ஆண்டுகளுக்கான பாதுகாப்பு கட்டமைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட இந்தியாவும், அமெரிக்காவும் ஒப்புக்கொண்டுள்ளதாக அமெரிக்க மூத்த பாதுகாப்பு செய்தித் தொடர்பாளர் கர்னல் கிறிஸ் டெவின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமெரிக்க ராணுவத் தலைமையகமான பென்டகன் வெளியிட்டுள்ள அறிக்கையில், "செவ்வாயன்று (ஜூலை 1) நடைபெற்ற ஒரு தொலைபேசி உரையாடலின் போது, அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் பீட் ஹெக்செத்தும், இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கும் இந்த ஆண்டு இறுதியில் சந்திக்கும் போது புதிய கட்டமைப்பை இறுதி செய்து கையெழுத்திட ஒப்புக்கொண்டனர்.



பிப்ரவரி 2025ல் அதிபர் ட்ரம்ப் மற்றும் பிரதமர் மோடியின் கூட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாப்பு இலக்குகளை அடைவதில் இரு நாடுகளும் அடைந்துள்ள கணிசமான முன்னேற்றத்தை பாதுகாப்பு அமைச்சர் ஹெக்செத் மற்றும் அமைச்சர் சிங் ஆகியோர் ஆய்வு செய்தனர்.

இந்தியாவுக்கு வழங்குவதாக அமெரிக்கா ஒப்புக்கொண்ட முக்கிய பாதுகாப்பு தளவாடங்கள் குறித்தும், இரு நாடுகளுக்கும் இடையே நெருக்கமான பாதுகாப்பு தொழில்துறை ஒத்துழைப்பின் முக்கியத்துவம் குறித்தும் இருவரும் விவாதித்தனர்" என்று பென்டகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் பீட் ஹெக்செத், "ஜூலை 1 ஆம் தேதி, பாதுகாப்பு அமைச்சர் பீட் ஹெக்செத் இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்குடன் பேசினார். தெற்காசியாவில் அமெரிக்காவின் முக்கிய பாதுகாப்பு பங்காளியாக இந்தியா திகழ்வதாகவும், எனவே, அமெரிக்கா இந்தியாவுக்கு முன்னுரிமையை அளிக்கிறது." என்று தெரிவித்தார்.

முன்னதாக, ஜூலை 1ம் தேதி ராஜ்நாத் சிங் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் பீட் ஹெக்செத்துடன் பேசியதில் மகிழ்ச்சி. இந்தியஅமெரிக்க பாதுகாப்பு கூட்டாண்மையை மேலும் ஆழப்படுத்தவும், திறன் மேம்பாட்டில் ஒத்துழைப்பை வலுப்படுத்தவும், புதிய முயற்சிகளை மதிப்பாய்வு செய்யவுமான இந்த உரையாடல் சிறப்பாக இருந்தது.

பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் அமெரிக்கா இந்தியாவுக்கு அளித்த அசைக்க முடியாத ஆதரவுக்கு எனது ஆழ்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். விரைவில் அவரைச் சந்திக்க ஆவலுடன் காத்திருக்கிறேன்." என்று தெரிவித்திருந்தது நினைவுகூரத்தக்கது.

## 'வேறு மாதிரி என்றால், எந்த மாதிரி?' விருதுநகர் எஸ்.பி. பேச்சை சுட்டிக்காட்டி அரசுக்கு பழனிசாமி எச்சரிக்கை

சென்னை: ஜூலை.4-

"பட்டாசு விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்காக நிவாரணம் கோரி போராடியவர்களைப் பார்த்து "ஒழுங்கா இருக்கணும், இல்லனா வேற மாதிரி ஆகிடும்" என்று விருதுநகர் எஸ்.பி. மிரட்டியுள்ளது வன்மையாக கண்டிக்கத்தக்கது. வேறு மாதிரி என்றால், எந்த மாதிரி? மடப்புரம் அஜித்குமார் மாதிரியா?. மக்களை மிரட்டுவது, வன்முறையை கட்டவிழ்த்து விடுவது, சட்டத்தை மீறி செயல்படுவதை எல்லாம் உடனடியாக கைவிட வேண்டும் " என்று அதிமுக பொதுச் செயலாளரும், சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி அரசுக்கு எச்சரித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்த பதிவில், "விருதுநகர் மாவட்டம் சின்னக்காமன்பட்டி பட்டாசு ஆலை வெடி விபத்தில் 8 பேர் உயிரிழந்த நிலையில், நிவாரணம் கோரி போராடிய மக்களைப் பார்த்து "ஒழுங்கா இருக்கணும், இல்லனா வேற மாதிரி ஆகிடும்" என்று விருதுநகர் எஸ்.பி. மிரட்டியுள்ளது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

வேறு மாதிரி என்றால், எந்த மாதிரி? மடப்புரம் அஜித்குமார் மாதிரியா? பட்டாசு ஆலைப் பாதுகாப்பை உறுதி செய்யும் நிர்வாகத் திறன் இல்லை; போராடும் மக்களின் கோரிக்கையைக் கேட்கக் கூட மனமில்லை; மக்களை மிரட்டவும், அச்சுறுத்தவும் மட்டும் ஸ்டாலின் அரசின் குரல்கள் உயர்கின்றனவா? வரலாற்றுப் பாசிசம் தோற்றுவிடும் ஸ்டாலின் அரசின் கொடுங்கோன்மையிடம்!

மக்களை மிரட்டுவது, வன்முறையை கட்டவிழ்த்து விடுவது , சட்டத்தை மீறி செயல்படுவதை எல்லாம் உடனடியாக கைவிட வேண்டும் என ஸ்டாலின் மாடல் அரசை எச்சரிக்கிறோம்." என்று குறிப்பிட்டுள்ளார்.

நடந்தது என்ன? முன்னதாக நேற்று சிவகாசி பட்டாசு ஆலை விபத்தில் பலியானவர்களின் உறவினர்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். 8 பேர் இறந்த நிலையில், 5 பேரின் உடலை உறவினர்கள் உயிரிழந்தோரின் உடலைப் பெற்று கொள்ளவில்லை. அவர்கள் உயிரிழந்தவர்களுக்கு வழங்கப்பட்ட நிதியை உயர்த்தி வழங்க வேண்டும், ஆலை நிர்வாகம் 10 லட்ச ரூபாய் நிவாரணம் வழங்க வேண்டும் என உடல்களை பெற்றுக்கொள்ளாமல் சாலை மறியல் மற்றும் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

போராட்டத்தின் நடுவே மாவட்ட எஸ்.பி.கண்ணன் போராடியவர்களை நோக்கி "ஒழுங்கா இருக்கணும், இதற்கு மேல் கோஷம் எழுபினால் வேற மாதிரி ஆயிடும்." என மிரட்டும் தொணியில் பேசினார். இதனை சுட்டிக்காட்டியே எடப்பாடி பழனிசாமி திமுக அரசைக் கண்டித்துள்ளார்.

## வணிகவரித்துறை, பள்ளிக்கல்வித்துறை காலியிடங்களை பதவி உயர்வின் மூலம் நிரப்ப தயக்கம் ஏன்? அன்புமணி

சென்னை: ஜூலை.4-

வணிகவரித்துறை, பள்ளிக்கல்வித்துறையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட காலியிடங்களை பதவி உயர்வின் மூலம் நிரப்ப தயக்கம் ஏன்? என தமிழக அரசுக்கு பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழக அரசின் இரு முக்கியத் துறைகளான பள்ளிக்கல்வித்துறை, வணிகவரித் துறை ஆகியவற்றில் பதவி உயர்வின் மூலம் நிரப்பப்பட வேண்டிய ஆயிரத்துக்கும் மேற்பட்ட பணியிடங்கள் பல மாதங்களாக காலியாக இருக்கும் நிலையில், அவற்றை நிரப்பவும், தகுதியான அதிகாரிகளுக்கு பதவி உயர்வு வழங்கவும் தமிழக அரசு மறுத்து வருவது கண்டிக்கத்தக்கது.



தமிழக அரசுக்கு வருவாய் ஈட்டித் தரும் முதன்மைத் துறை வணிகவரித்துறை ஆகும். அத்துறையில் பணியாற்றும் அதிகாரிகளுக்கு ஆண்டு தோறும் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும். ஆனால், வணிகவரி அலுவலர், உதவி ஆணையர் பணியிடங்கள் கடந்த சில ஆண்டுகளாக பதவி உயர்வின் மூலம் நிரப்பப்படாததால் 200=க்கும் மேற்பட்ட பணியிடங்கள் காலியாக உள்ளன.

அப்பணியிடங்களுக்கான பதவி உயர்வுப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ள நிலையிலும் கூட, அதை செயல்படுத்த அரசு தயாராக இல்லை. அதனால், அத்துறையில் வரி வசூல் பாதிக்கப்படுவதுடன், பணியில் உள்ள அதிகாரிகளுக்கு தேவையற்ற பணிச்சுமையும் ஏற்படுகிறது.

அதேபோல், பள்ளிக்கல்வித் துறையில் ஆசிரியர்களில் தொடங்கி முதன்மைக் கல்வி அலுவலர் வரையிலான ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணியிடங்கள் காலியாக உள்ளன. 15க்கும் மேற்பட்ட முதன்மை கல்வி அலுவலர்கள், 29 மாவட்ட கல்வி அலுவலர்கள் மற்றும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் பணியிடங்கள் பதவி உயர்வின் மூலம் நிரப்பப்பட்டிருக்க வேண்டும். ஆனால், பல மாதங்களாக இந்தப் பணியிடங்கள் நிரப்பப்படாததால் உயர்நிலைப்பள்ளிகளிலும், மாவட்ட அளவிலான கல்வி கட்டமைப்பிலும் நிர்வாகப் பணிகள் முடங்கிக் கிடக்கின்றன.

பள்ளிக்கல்வித்துறை தான் இளைய தலைமுறையினரின் முன்னேற்றத்திற்கு அடித்தளம் அமைக்கும் துறையாகும். ஏற்கனவே பள்ளிக்கல்வித்துறையில் கடுமையான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. இத்தகைய சூழலில் தலைமை ஆசிரியர் பணியிடங்களும் நிரப்பப்படாமல் காலியாக கிடந்தால் பள்ளிகளின் செயல்பாடுகள் முடங்கி விடும்; குழந்தைகளின் கல்வி பாதிக்கப்படும். அப்படிப்பட்ட நிலை ஏற்படுவதைத் தான் திராவிட மாடல் அரசு விரும்புகிறதா? என்பது தெரியவில்லை.

அரசின் அனைத்துத் துறையின் செயல்பாடுகளும் தெளிந்த நீரோடையைப் போல சீராக ஓடிக் கொண்டிருக்க வேண்டும். அதற்கு அனைத்துத் துறைகளிலும் போதிய பணியாளர்கள் தேவை. இல்லாவிட்டால் அரசு நிரவாகம் தேங்கிய குட்டையைப் போல முடங்கி விடும். எனவே, பள்ளிக்கல்வித்துறை, வணிகவரித் துறை பதவி உயர்வின் மூலம் நிரப்பப்பட வேண்டிய காலியிடங்கள் அனைத்தையும் உரிய நடைமுறைகளை பின்பற்றி நிரப்ப தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## தமிழகத்தில் இயங்கும் பேருந்துகளின் எண்ணிக்கை திமுக ஆட்சியில் காகித வடிவிலேயே உள்ளது: ஓபிஎஸ் விமர்சனம்

சென்னை: ஜூலை.4-

முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் விடுத்துள்ள அறிக்கை: திமுக ஆட்சியமைத்தது முதல் தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கைகளில், 8,500 பேருந்துகள் புதிதாக வாங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், அறிவிப்பில் கால் பகுதி பேருந்துகள் கூட வாங்கப்படவில்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை.



குறிப்பாக, சென்னை, மேற்கு தாம்பரத்திலிருந்து மண்ணிவாக்கம், முடிச்சூர், வண்டலூர் போன்ற பகுதிகளுக்கு இரவு 7 மணி முதல் 8 மணி வரையிலான ஒரு மணி நேரத்தில் 12 பேருந்துகள் இயக்கப்பட வேண்டும். ஆனால், வெறும் மூன்று பேருந்துகள் மட்டுமே இயக்கப்படுவதாக களநிலவரம் தெரிவிக்கிறது.

இதன் காரணமாக, ஒவ்வொரு நாளும் கூடுதலாக ரூ.40 முதல் ரூ.50 செலவிட வேண்டிய கட்டாயத்துக்கு ஏழை எளிய மக்கள் ஆளாக்கப்பட்டுள்ளனர். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதற்கேற்ப தமிழகம் முழுவதும் இதே நிலைமைதான். இதிலிருந்து, மக்களின் தேவைக்கேற்ப பேருந்துகள் இயக்கப்படுவதில்லை என்பது தெளிவாகிறது. தமிழகத்தில் பேருந்துகள் இயங்கும் எண்ணிக்கை என்பது காகிதவடிவில்தான் இருக்கிறது என்பதை களயதார்த்தம் சுட்டிக்காட்டுகிறது.

எனவே, முதல்வர் கடந்த 4 ஆண்டுகளில் கொள்முதல் செய்யப்பட்ட புதிய பேருந்துகள் குறித்த புள்ளி விவரங்களை தெரிவிக்க வேண்டும். தேவைக்கேற்ப புதிய பேருந்துகளை வாங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

## 'ஆயுதமேந்திய போலீஸ் பாதுகாப்பு' அஜித்குமார் தாக்கப்பட்டதை வீடியோ எடுத்த நபர் டிஜிபிக்கு கோரிக்கை

சிவகங்கை: ஜூலை.4-

மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமாரை, தனிப்படை போலீஸார் தாக்கியதை வீடியோ எடுத்தவர், ஆயுதமேந்திய போலீஸ் பாதுகாப்பு கேட்டு தமிழக டிஜிபி சங்கர் ஜிவாலுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே மடப்புரம் பத்ரகாளியம்மன் கோயிலில் காவலாளியாகப் பணிபுரிந்தவர் அஜித்குமார் (29). அவரை பக்தர் நிகிதா கொடுத்த திருட்டு புகாரின்பேரில் தனிப்படை போலீஸார் விசாரித்தனர். அப்போது போலீஸார் கடுமையாக தாக்கியதில் ஜூன் 28ம் தேதி அஜித்குமார் உயிரிழந்தார்.





கோயில் பின்புறம் மாட்டுத் தொழுவத்தில் அஜித்குமாரை, தனிப்படை போலீஸார் கடுமையாக தாக்குவதை கோயில் பணியாளர் ஒருவர், கழிவறையில் மறைந்திருந்து வீடியோ எடுத்தார். இதனால் அவர் நேரடி சாட்சியாக உள்ளார். வீடியோ எடுத்தவர் இன்று (வியாழக்கிழமை) தனக்கு ஆயுதமேந்திய போலீஸ் பாதுகாப்பு கேட்டு இமெயிலில் தமிழக டிஜிபிக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்த கடிதத்தில் அவர் கூறியதாவது: போலீஸார் தாக்கி அஜித்குமார் மரணமடைந்த வழக்கில், ஜூன் 1ம் தேதி உயர் நீதிமன்றம் மதுரை அமர்வில் நேரில் ஆஜராகி சாட்சி அளித்துள்ளேன். அஜித்குமார் வழக்கில் கைது செய்யப்பட்ட தலைமைக் காவலர் ராஜா என்பவர் பல்வேறு குற்றப்பிண்ணனி உடைய ரவுடிகளுடன் தொடர்பில் இருந்துள்ளார்.

ஜூன் 28ம் தேதி காலையில் தனிப்படை போலீஸார் விசாரணையில் நான் காவலர் ராஜாவை நேரில் சந்தித்தேன். அப்போதே என்னை கடுமையாக மிரட்டி வந்தார். இதனால் எனக்கும், என்னை சார்ந்தோருக்கும் அச்சுறுத்தல் உள்ளது. இந்த வழக்கில் சாட்சியாக உள்ள எனக்கும், மற்றவர்களுக்கும் ஆயுதமேந்திய போலீஸார் பாதுகாப்பு வழங்க வேண்டும். அதுவும் பிற மாவட்டத்தைச் சேர்ந்த போலீஸாரை நியமிக்க வேண்டும். இவ்வாறு அந்த கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

மேலும் இந்தக் கடித நகலை உயர் நீதிமன்றம் மதுரை அமர்வு பதிவாளருக்கும், தென்மண்டல ஐஜிக்கும் அனுப்பியுள்ளார்.



■ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் காணொளி காட்சி வாயிலாக மதுரை மாநகராட்சிக்கு உட்பட்ட 18 இடங்களில் நலவாழ்வு மையங்கள் மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களை பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள் அதனைத் தொடர்ந்து தைக்கால் தெரு நலவாழ்வு மையத்தை மதிப்பிற்குரிய மேயர் திருமதி.இந்திராணி பொன்வசந்த் அவர்கள், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.பூமிநாதன் அவர்கள் ஆகியோர் பார்வையிட்டார்கள் அருகில் துணை மேயர் திரு.தி.நாகராஜன் அவர்கள், மண்டலத் தலைவர் திருமதி. பாண்டிச்செல்வி அவர்கள், நகர்நல அலுவலர் மரு.இந்திரா அவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி.இந்திராகாந்தி, திரு.பாஸ்கரன், திருமதி.நூர்ஜஹான், அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

# தமிழ்நாடு முதலமைச்சர் ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கத்தினை துவக்கி வைக்கவுள்ளார்

## மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி தகவல்

சேலம், ஜூலை.04-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கத்தினை நாளை 04.07.2025 துவக்கி வைக்கவுள்ளார்கள். இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளதாவது.

தமிழ்நாடு சட்டப்பேரவையில் வெளியிடப்பட்ட 2025-26 ஆம் ஆண்டிற்கான வேளாண்மை மற்றும் உழவர்நலத்துறை நிதி நிலை அறிக்கையில் அறிவித்த திட்டமான ”ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம்” நாளை 04.07.2025 மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட உள்ளது.

மக்கள் நலமும், நல்வாழ்வும் அவர்கள் உண்ணும் உணவைப்பொறுத்தே அமைகிறது. உடல் நலம் பேண ஊட்டச்சத்து மிக்க உணவினை உரிய அளவில் உட்கொள்வது இன்றியமையாததாகும். ஊட்டச் சத்துகளை அளிப்பதில் காய்கறிகள், பழங்கள், பயறு வகைகள், சிறுதானியங்கள் பெரும்பங்காற்றுகின்றன. ஊட்டச்சத்துகளை வழங்கும் இந்த விளைப் பொருட்களின் உற்பத்தியை அதிகரித்து ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதி செய்வதுடன், உழவர்களின் வருமானத்தை உயர்த்தும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

ஊட்டச்சத்து மிக்க நஞ்சற்ற காய்கறிகள் கிடைப்பதை உறுதி செய்திடவும், மக்களின் அன்றாட காய்கறித் தேவைகளை நிறைவு செய்யவும், வீட்டு தோட்டங்களில் காய்கறிகள் வளர்ப்பதை ஊக்குவிக்கும் விதமாக தக்காளி, கத்தரி, வெண்டை, மிளகாய், கொத்தவரை, கீரை வகைகள் போன்ற ஆறு வகையான காய்கறிகள் விதைகள் அடங்கிய 76,300 தொகுப்புகள் சேலம் மாவட்டத்தில் உள்ள விவசாய குடும்பங்களுக்கு 100% மானியத்தில் வழங்கப்படவுள்ளது.

நகர்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் வசிக்கும் மக்களின் ஊட்டச்சத்துப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக விரைவில் பலனளிக்கும் பப்பாளி, கொய்யா, எலுமிச்சை ஆகிய மூன்று வகையான பழச்செடிகள் அடங்கிய பழச்செடித் தொகுப்புகள் 47,000 விவசாய குடும்பங்களுக்கு 100% மானியத்தில் வழங்கப்படவுள்ளது. புரதசத்து நிறைந்த மரத்துவரை, காராமணி மற்றும் அவரை ஆகிய உள்ளிட்ட பயறுவகைகளை இல்லம்தோறும் வளர்க்கும் பொருட்டு, பயறுவகைகள் விதை தொகுப்பு 5,000 எண்கள் 100% மானியத்தில் வழங்கப்படும்.

எனவே, சேலம் மாவட்ட வேளாண் பெருமக்கள் அனைவரும் இத்திட்டத்தில் பயனடைய தங்களது வட்டார வேளாண்மைத்துறை மற்றும் தோட்டக்கலைத்துறை அலுவலர்களை அணுகி உழவர் செயலி அல்லது tnagrisnet/tnhorticulture மூலமாக பதிவு செய்து பயன்பெறலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். இரா.பிருந்தாதேவி தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாடு முதலமைச்சர் தேனி மாவட்டத்தில் ரூ.1.70 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 1 அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் 2 நகர்ப்புற நலவாழ்வு மையங்களை காணொளிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்



தேனி, ஜூலை.04-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் சென்னையிலிருந்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் தேனி மாவட்டம் தேனிஅல்லிநகரம் நகராட்சிகுட்பட்ட அரண் மனைபுதூர் பகுதியில் ரூ. 1.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையம், பெரியகுளம் நகராட்சிகு ட்பட்ட வடகரை பகுதியில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் மற்றும் சின்னமனூர் நகராட்சி குட்பட்ட கருங்கட்டான்குளம் பகுதியில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நகர்ப்புற நலவாழ்வு மையங்களை காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, பெரியகுளம் நகராட்சி குட்பட்ட வடகரை பகுதியில் திறந்து வைக்கப்பட்ட மக்கள் நல்வாழ்வு மையத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்ஜீத் சிங், தேனி பாராளுமன்ற உறுப்பினர் திரு. தங்கதமிழ்செல்வன் அவர்கள், பெரியகுளம் சட்டமன்ற உறுப் பினர்கே. எஸ்.சரவணக்குமார் அவர்கள் ஆகியோர் குத்துவிளக்கேற்றி வைத்து பார்வையிட்டார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் ஆரோக்கியத்தினை கருத்தில் கொண்டு பல்வேறு சிறப்பு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். தமிழ்நாட்டில் பொதுமக்களின் இருப்பிடங்களுக்கே சென்று மருத்துவ சேவையாற்றி வழங்கப்பட்டு வருகிறது. இதனால் தமிழ்நாடு சுகாதாரத்துறையில் சிறந்த சேவையாற்றும் மாநிலங்களில் முதன்மையாக விளங்கி வருகிறது. மேலும், மருத்துவக் கட்டமைப்பை நவீனமயமாக்கவும், தரம் உயர்த்தி மேம்படுத்தவும் பல்வேறு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டு வருகிறது.

அந்தவகையில் இன்றைய தினம், தேனி அரண்மனைபுதூர் பகுதியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையமும், பெரியகுளம் வடகரை மற்றும் சின்னமனூர் கருங்கட்டான்குளம் ஆகிய பகுதிகளில் நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் பொது மக்களுக்கு கர்ப்பகால மற்றும் பிரசவகால சேவைகள், சிசு மற்றும் குழந்தைகள் நல சேவைகள், வளரிளம் பருவத்தினருக்கான சேவைகள், தொற்று மற்றும் தொற்றா நோய்களுக்கான கிசிச்சைகள், மன நோய்கள், கண், காது, மூக்கு மற்றும் தொண்டை தொடர்பான பிரச்சனைகள், விபத்து சிகிச்சை உள்ளிட்ட பல்வேறு சேவைகள் வழங்கப்படும்.

இந்நிகழ்வில் பெரியகுளம் நகர்மன்றத் தலைவர் திருமதி சுமிதா சிவக்குமார், பெரியகுளம் சார் ஆட்சியர் திரு.ரஜத் பீடன், இ.ஆ.ப., தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு. முத்துசித்ரா, இணை இயக்குநர் (மருத்துவ பணிகள்) மரு.கலைச் செல்வி, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.ஜவஹர்லால், நகராட்சி ஆணையாளர் செல்வி தமீஹா சுல்தானா, வட்டாட்சியர் திரு.மருதுபாண்டி மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மாவட்ட ஆட்சித்தலைவர் ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி செய்தி குறிப்பில் தெரிவித்ததாவது

சிவகங்கை, ஜூலை.04-

சிவகங்கை மாவட்டத்தில் ஒன்றிய அரசின் திட்டங்கள் திறன்பட செயல்படுத்தப் படுவதையும், திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு பயன்பாட்டு சான்று அடிப்படையில் கிடைக்கப் பெறுவதை உறுதிப்படுத்தவும், பயனாளிகள் மற்றும் திட்டப்பலன்கள் கண்காணிக்கவும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் மாவட்ட மகளிர் அதிகார மையம் (DHEW) கடந்த நவம்பர் 2023 முதல் சிவகங்கை மாவட்டத்தில் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

தற்பொழுது, சிவகங்கை மாவட்டத்தில் உள்ள மாவட்ட மகளிர் அதிகார மையத்திற்கு (DHEW) ஒப்பந்த அடிப்படையில் தகவல் தொழில் நுட்ப உதவியாளர் (IT Assistant) பணியிடத்திற்கு பணி நியமனம் செய்யும் பொருட்டு, கீழ்க்கண்ட நிலையில் பணியாளர்கள் தேர்வு செய்யப்படவுள்ளனர்.

தகவல் தொழில்நுட்ப உதவியாளர்: 1 (ஒன்று) (IT Assistant)

தொகுப்பூதியம்: ரூ. 20,000/

கல்வித் தகுதி : கணினி / ஐடி பாடப்பிரிவில் இளங்கலைப்பட்டம்

வயது வரம்பு : 35 வயதிற்குள் இருத்தல் வேண்டும்.

பணியிடம் : சிவகங்கை

முன் அனுபவம் : அரசு அல்லது அரசு சாரா/ தகவல் தொழில்நுட்பம் சார்ந்த மாநில அல்லது மாவட்ட அளவில் தரவு மேலாண்மை, செயல்முறை ஆவணங்கள் மற்றும் வலை அடிப்படையிலான அறிக்கையிடல் வடிவங்களில் குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

எனவே, ஆர்வமுள்ள தகுதியான நபர்கள் தங்களது சுயவிபரங்களை வருகின்ற 18.07.2025 அன்று மாலை 05.00 மணிக்குள் தரை தளம், மாவட்ட சமூக நல அலுவலகம், மாவட்ட ஆட்சியர் வளாகம், சிவகங்கை என்ற முகவரிக்கு நேரிலோ, அல்லது தபால் மூலமாகவோ கிடைக்குமாறு அனுப்பி வைத்திடல் வேண்டும். மேலும், விவரங்களுக்கு மாவட்ட ஆட்சியர் வளாக தரை தளத்தில் செயல்பட்டு வரும் மாவட்ட சமூகநல அலுவலகத்தை நேரில் தொடர்பு கொண்டு விபரங்கள் பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.




# மாவட்ட ஆட்சித்தலைவர் ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி செய்தி குறிப்பில் தெரிவித்ததாவது

சிவகங்கை, ஜூலை.04-

திட்டமில்லா பகுதிகளில் 01.01.2011ஆம் தேதிக்கு முன்னர் கட்டப்பட்டு இயங்கிவரும் அனுமதியற்ற கல்வி நிறுவனக் கட்டிடங்களுக்கு, வரன்முறைபடுத்தும் திட்டத்தின் கீழ் இணையதளம் மூலம் விண்ணப்பிக்க மீண்டும் ஒரு வாய்ப்பாக வருகின்ற 30.06.2026 வரை ஓராண்டு காலம் காலநீட்டிப்பு செய்து, ஏற்கனவே வெளியிடப்பட்ட அரசாணையில் குறிப்பிடப்பட்ட வழிகாட்டுதல்களில் எவ்வித மாற்றமும் இல்லாமல் அரசாணை எண்.92, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (ந.வ(3)) துறை, நாள்:26.06.2025ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், அவ்வாறாக கட்டப்பட்டுள்ள அனுமதியற்ற கல்வி நிறுவன கட்டடங்கள் மலையிடப் பகுதியில் (பிகிசிகி) அமையும் பட்சத்தில், அரசு கடிதம் எண்.15535/ ந.வ.4(3)/2019, நாள்: 18.02.2020ல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வழிமுறைகளை பின்பற்றுதல் வேண்டும். இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க விரும்புபவர்கள் <https://www.tcponline.tn.gov.in/> என்ற இணையதள முகவரியின் வாயிலாக விண்ணப்பித்து பதிவு செய்து, பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.

# மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் செய்தி குறிப்பில் தெரிவித்ததாவது

இராமநாதபுரம், ஜூலை.04-

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மூலமாக விவசாய தொழிலாளர்களை ஊக்குவித்திடும் வகையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பினை சார்ந்தவர்களுக்கு விவசாய நிலம் வாங்குவதற்கு தாட்கோ மானியத்துடன் கிரையத் தொகையினை இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் குறைந்த வட்டியில் கடனாக பெற்று வழங்கப்படுகிறது.

நிலமற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாய தொழிலாளர்கள் சமூக பொருளாதார நிலையில் மேம்பாடு அடையும் பொருட்டு அவர்கள் விவசாய நிலம் வாங்க நிலத்தின் சந்தை மதிப்பீட்டின்படி திட்டத் தொகையில் 50மூ அல்லது அதிகப்பட்சம் ரூ.5.00 இலட்சம் வரை மானியம் விடுவிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் வாங்கப்படும் நிலங்களுக்கு 100 சதவீதம் முத்திரைத்தாள் மற்றும் பதிவுக் கட்டணத்தில் விலக்களிக்கப்படுகிறது.

தற்போது பயனாளிகள் பங்குத்தொகை இல்லாமல் மானியத்தொகை போக எஞ்சிய கிரையத்தொகையினை தேசிய பட்டியலினத்தோர் நிதி மேம்பாட்டுக் கழக நிதியிலிருந்து பயனாளிகளுக்கு 6 மூ மிக குறைந்த வட்டியில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மூலமாக கடனாக பெற்று நிலம் வாங்குவதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பினர் தாட்கோ இணையதள முகவரியில் விண்ணப்பம் செய்ய வேண்டும் (www.tahdco.com) மேலும் விபரங்களுக்கு தாட்கோ மாவட்ட மேலாளர் அலுவலகத்தை அணுகி விவரம் பெற்று உரிய ஆவணங்களுடன் பதிவேற்றம் செய்யலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன், இ.ஆ.ப., அவர்கள் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

# எம்.ஜி.எம் ஹெல்த்கேர் மருத்துவமனை 13 மணி நேர கல்லீரல் அறுவை சிகிச்சையில் 48 வயது நோயாளியின் உயிரை காப்பாற்றி சாதனை



மதுரை, ஜூலை.04-

சென்னை எம் ஜி எம் ஹெல்த்கேர் மருத்துவமனை முன்னணி கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை நிபுணர், மதுரை லில்லி மிஷன் மருத்துவமனையின் கல்லீரல் சிகிச்சை நிபுணரின் ஆதரவுடன் 13 மணி நேர உயிருள்ள நபர் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சையை வெற்றிகரமாகச் செய்து, 48 வயது மதுரை நோயாளின் உயிரைக் காப்பாற்றினார் கடுமையான மஞ்சள் காமாலை, வயிறு வீக்கம், உடல் சோர்வு, உணவுக் குழாயிலிருந்து ரத்தப்போக்கு மற்றும் படிப்படியான கல்லீரல் செயலிழப்பால் அவர் அவதிப்பட்டு வந்தார். நோயாளியின் மனைவி தனது கல்லீரலின் ஒரு பகுதியை தானம் செய்ய முன்வந்தார் உயிருள்ள நபர் நன்கொடை கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை என்பது நோய்வாய்ப்பட்ட கல்லீரலை நன்கொடையாளரின் கல்லீரலின் ஒரு பகுதியைக் கொண்டு மாற்றுவதாகும் ரத்த இழப்பைக் குறைப்பதற்கும் அறுவை சிகிச்சை துல்லியத்தை உறுதி செய்வதற்கும் அல்ட்ராசவுண்ட் செயற்கை கிராஃப்ட் புனரமைப்பு மற்றும் துல்லியமான கருவிகளை அறுவை சிகிச்சை குழு பயன்படுத்தியது அதே நேரத்தில் நிகழ்நேர இதய கண்காணிப்பு அறுவை சிகிச்சை முடியும் வரை நோயாளியைப் பாதுகாத்தது

இந்த நடைமுறையில் அறுவை சிகிச்சை நிபுணர்கள் மற்றும் மயக்க மருந்து நிபுணர்கள் மற்றும் கூடுதல் பணியாளர்கள் அடங்கிய 24 பேர் கொண்ட குழு பங்கேற்றது எம் ஜி எம் ஹெல்த்கேரின் கல்லீரல் நோய்கள், மாற்று மற்றும் பிறிஷி அறுவை சிகிச்சை நிறுவனத்தின் மூத்த ஆலோசகர் மற்றும் இயக்குநர் டாக்டர் எஸ் தியாகராஜன் தலைமையில், மதுரை லில்லி மிஷன் மருத்துவமனையின் இரைப்பைக் குடலியல் நிபுணர், கல்லீரல் சிகிச்சை மற்றும் எண்டோஸ் கோபிஸ்ட் டாக்டர் ஏசி அருண ஆதரவுடன் இந்த மாற்று அறுவை சிகிச்சை நடத்தப்பட்டது.

இந்த சிக்கலான அறுவை சிகிச்சை குறித்து டாக்டர் எஸ். தியாகராஜன் கருத்து தெரிவிக்கையில், ஹெபடைடிஸ் பி மற்றும் சி போன்ற நாள்பட்ட வைரஸ் தொற்றுகள். மது அருந்துதல் உடல் பருமன் மற்றும் கொழுப்பு கல்லீரல் நோய் ஆகியவை கல்லீரல் செயலிழப்புக்கு முக்கிய காரணங்களாகும் சரியான நேரத்தில் நோய் கண்டறிதல் மற்றும் லேப்ராஸ்கோபிக் மற்றும் ரோபோடிக் கல்லீரல் அறுவை சிகிச்சைகள் உள்ளிட்ட நவீன அறுவை சிகிச்சை நுட்பங்களை மேற்கொள்வதன் மூலம், சிக்கலான அறுவை சிகிச்சையையும் வெற்றிகரமாக மேற்கொள்ள முடிகிறது . மதுரை பகுதி நோயாளிகளுக்கு எங்கள் கல்லீரல் மாற்று திட்டத்தில் 100 சதவீதம் வெற்றியை அடைந்துள்ளோம் தமிழக அரசின் முதலமைச்சர் சுகாதார காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சையை முழுமையாக கட்டணம் இன்றி அனைவரும் மேற்கொள்ளலாம்‘‘ என்றார்

மதுரையின் முன்னணி இரைப்பைக் குடலியல் மற்றும் கல்லீரல் சிகிச்சை நிபுணர் டாக்டர் ஏ.சி அருண் குறிப்பிடுகையில், ‘தென் தமிழகம் முழுவதும் கல்லீரல் நோய் பாதிப்புகள் அதிகரித்து வருவதால், ஆரம்பகால கண்டறிதல் மற்றும் அணுகக்கூடிய மாற்று சிகிச்சை சேவைகளின் தேவை முன்னெப்போதையும் விட அதிகமாக உள்ளது எம்.ஜி.எம் ஹெல்த்கேர் உடனான எங்கள் ஒத்துழைப்பு மதுரையிலேயே நோயாளிகளுக்கு மேம்பட்ட கல்லீரல் சிகிச்சையை கொண்டு வர எங்களுக்கு உதவியுள்ளது இந்த சிக்கலான அறுவை சிகிச்சை, சரியான நேரத்தில் சிகிச்சை மற்றும் பலதுறை குழுப்பணி என்ன சாதிக்க முடியும் என்பதற்கு ஒரு சான்றாகும்.’ என்றார்




# அரியலூர் அருகே தண்டவாளத்துக்கு அடியில் மண் சரிவு: சென்னை ரயில் நடுவழியில் நிறுத்தம்

அரியலூர், ஜூலை.04-

விழுப்புரம்திருச்சி ரயில் மார்க்கத்தில் தினமும் பயணிகள் ரயில்கள், அதிவேக ரயில்கள், வாராந்திர விரைவு ரயில்கள் இயக்கப்படுகிறது. ரயில் பயணிகளுக்கு முக்கியத்துவம் வாய்ந்த இந்த ரயில் வழி மார்க்கத்தில் அரியலூர் அருகே வெள்ளூர் கிராம பகுதியில் ஒட்டக்கோவில் மற்றும் அதன் சுற்றுவட்டாரத்தை சேர்ந்த 10க்கும் மேற்பட்ட கிராம மக்கள் அத்தியவாசிய பணிகளுக்காக அரியலூர் செல்ல தினமும் விழுப்புரம்திருச்சி ரயில்வே தண்டவாளத்தை கடந்து சென்று வருகின்றனர். எனவே வெள்ளூர் பகுதியில் ரயில்வே சுரங்க பாதை அமைக்க வேண்டும் என வலியுறுத்தி போராட்டங்களை நடத்தினர்.

இந்நிலையில் மக்கள் கோரிக்கையை ஏற்று விழுப்புரம் ரயில்வே கோட்டம் சார்பில் அரியலூர் அருகே வெள்ளூரில் தண்டவாளத்துக்கு அடியில் சுரங்கப்பாதை அமைக்கும் பணி கடந்த 4 மாதங்களுக்கு முன் துவங்கியது. தற்போது பணிகள் மும்முரமாக நடந்து வருகிறது. நேற்று மாலை பணி முடிந்து ஊழியர்கள் சென்று விட்டனர். இந்நிலையில் இன்று காலை 7 மணி அளவில் சுரங்க பாதையில் தண்டவாளத்துக்கு அடியில் திடீரென மண் சரிவு ஏற்பட்டது. இதன்காரணமாக தண்டவாளம் பலமிழந்திருக்கும் என கருதி ரயில்வே நிர்வாகத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து அந்த வழியே வந்த விழுப்புரத்திலிருந்து திருச்சி வந்த பயணிகள் (வ.எண் 56111) ரயில் மண் சரிவு ஏற்பட்ட இடத்திலிருந்து 200 மீட்டர் தூரத்துக்கு முன்பாக நிறுத்தப்பட்டது. இதேபோல் திருச்சியிலிருந்து அரியலூர் வரும் பல்லவன் ரயில் அரியலூர் ரயில் நிலையத்திலும், சென்னையிலிருந்து காரைக்குடி சென்ற வந்தே பாரத் விழுப்புரம் ரயில் நிலையத்திலும் நிறுத்தப்பட்டது. இந்நிலையில் தொழில்நுட்ப வல்லுனர்கள் 5 பேர், சுரங்கபாதை ஊழியர்கள் 5 பேர் சேர்ந்து மண் சரிவை சரி செய்யும் பணியில் ஈடுபட்டனர். பின்னர் அந்த வழியாக ரயில்கள் மெதுவாக இயக்கப்பட்டது. இதனால் அனைத்து ரயில்களும் 45 முதல் 1 மணி நேரம் தாமதமாக புறப்பட்டு சென்றன. இதனால் பயணிகள் அவதிக்குள்ளாகினர்.

# தென்மேற்கு பருவமழை மீண்டும் தீவிரம் தமிழ்நாட்டில் மழை நீடிக்கும்



சென்னை, ஜூலை.04-

கேரளாவில் தென்மேற்கு பருவமழை மீண்டும் தீவிரம் அடையத் தொடங்கியுள்ளது. இதையடுத்து மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் வட கடலோர மாவட்டங்களிலும் நேற்று மாலை இரவில் வெப்பச் சலன மழை பெய்யத் தொடங்கியுள்ளது. வங்கக் கடலில் உருவாகி ஒடிசா மேற்கு வங்க கரையைத் தொட்டு தரையேறிய காற்றழுத்தத் தாழ்வுப்பகுதி, ஒடிசா கடலோரம் தொடங்கி பீகார், ஜார்கண்ட், சத்தீஷ்கர் வரையில் ஒரு குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதியாக நீடித்துக் கொண்டிருக்கிறது. நேற்று தீவிரம் அடையத் தொடங்கியுள்ள தென் மேற்கு பருவமழை கேரளாவில் சற்று கூடுதலாக பெய்யத் தொடங்கும்.

ஓரிரு இடங்களில் அதீத மழை பெய்யும். கர்நாடகாவின் உள்பகுதி, கர்நாடகாவின் கடலோரப் பகுதி, மத்தியப் பகுதிகளிலும் படிப்படியாக இந்த மழை பரவத் தொடங்கும். மகாராஷ்ட்ரா, கோவா, ஆந்திரா, தெலங்கானா பகுதிகளிலும் கூடுதலாக மழை பெய்யும் வாய்ப்புள்ளது. குஜராத் முதல் ஒடிசாவுக்கு இடைப்பட்ட பகுதிகளிலும், பீகார், ஜார்கண்ட் பகுதிகளிலும் இந்த காற்றழுத்தம் மெல்ல நகரும் தன்மை காரணமாக நல்ல மழை பெய்யும். தென்மேற்கு பருவமழை முடியும் வரையில் நல்ல மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வட கிழக்கு மாநிலங்களிலும் மழை நீடிக்கும்.

இதையடுத்து, 10ம் தேதியில் இந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி மேற்கு நோக்கி நகர்ந்து குஜராத் வழியாக அரபிக் கடல் பகுதிக்கு சென்று விடும். இதற்கடுத்து, வங்கக் கடலில் 10ம் தேதியில் ஒரு புதிய காற்று சுழற்சி உருவாகி மீண்டும் அதே இடத்துக்கு வந்தாலும், மத்திய பிரதேசம் வழியாக நகர்ந்து செல்லும். இதன் காரணமாக 12ம் தேதியில் தென் மாநிலங்களில் கூடுதலாக மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு, கேரளாவில் மிக கனமழை மற்றும் கனமழையும் பெய்யும். பரவலாக மழை பெய்யும்.

சென்னை வானிலை ஆய்வு மையம் நேற்று வெளியிட்ட அறிக்கை: தமிழகத்தில் ஒருசில இடங்களில் நேற்று மழை பெய்துள்ள நிலையில், சில இடங்களில் வெப்பநிலை இயல்பைவிட 2 டிகிரி முதல் 3 டிகிரி வரையில் அதிகரித்து காணப்பட்டது. அதிகபட்சமாக, மதுரை விமான நிலையத்தில் நேற்று 102 டிகிரி வெயில் கொளுத்தியது. தூத்துக்குடி, வேலூர், நாகப்பட்டினம், சென்னை, தஞ்சாவூர் மாவட்டங்களில் 100 டிகிரி வெயில் நிலவியது. இந்நிலையில், மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக 8ம் தேதி வரையில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யும் வாய்ப்புள்ளது. சென்னையில் பொதுவாக வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யும் வாய்ப்புள்ளது. வெப்பநிலையை பொருத்தவரையில் 100 டிகிரியாக இருக்கும். மேலும், தென் தமிழகக் கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 65 கிமீ வேகத்தில் வீசும். இவ்வாறு சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.

அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வருகின்ற 10.07.2025 அன்றும், முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாளை முன்னிட்டு

# வருகின்ற 11.07.2025 அன்றும் பள்ளி மாணாக்கர்கள் மற்றும் கல்லூரி மாணாக்கர்ளுக்கு, மாவட்ட அளவிலான பேச்சுப்போட்டிகள் நடைபெறவுள்ளது: மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, தகவல்

சிவகங்கை, ஜூலை.04-

தமிழ்நாடு அரசு, தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில் நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களான அண்ணல் காந்தியடிகள், சவகர்லால் நேரு, அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் பிறந்த நாளை முன்னிட்டு ஆண்டுதோறும் மாவட்ட அளவில் கல்லூரி மற்றும் பள்ளி மாணாக்கர்களுக்கு பேச்சுப்போட்டிகள் நடத்தி பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகிறது.

அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சிவகங்கை மாவட்டத்தில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணாக்கர்கள் மற்றும் கல்லூரி மாணாக்கர்களுக்கு வருகின்ற 10.07.2025 (வியாழக்கிழமை) அன்றும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணாக்கர்கள் மற்றும் கல்லூரி மாணாக்கர்களுக்கு வருகின்ற 11.07.2025 (வெள்ளிக்கிழமை) அன்றும் பேச்சுப்போட்டிகள், சிவகங்கை மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்கல்லூரி அரங்கத்தில் நடைபெறவுள்ளது.

அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாள் பேச்சுப்போட்டியில், பள்ளி மாணாக்கர்களுக்கு 1. பூனா உடன்படிக்கை, 2. கற்பி, ஒன்றுசேர், புரட்சி செய், 3. அரசியலமைப்புச்சட்டமும், அம்பேத்கரும், 4. அண்ணல் அம்பேத்கரின் படைப்புகள் ஆகிய தலைப்புகளும் மற்றும் கல்லூரி மாணாக்கர்களுக்கு 1. அம்பேத்கரும், காந்தியடிகளும், 2.சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், 3. அம்பேத்கரும், சமூகநீதியும் ஆகிய தலைப்புகளில் போட்டிகள் நடத்தப்படவுள்ளது.

அதேபோன்று, வருகின்ற 11.07.2025 (வெள்ளிக்கிழமை) அன்று நடைபெறவுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி பிறந்தநாள் பேச்சுப்போட்டியில், பள்ளி மாணாக்கர்களுக்கு 1. நெஞ்சுக்கு நீதி, 2. செம்மொழி மாநாடு, 3. திரைத் துறையில் முத்தமிழறிஞர், 4.அரசியல் வித்தகர் கலைஞர், 5.தெற்கிலிருந்து ஒரு சூரியன் ஆகிய தலைப்புகளும் மற்றும் கல்லூரி மாணாக்கர்களுக்கு 1. சமூகநீதிக்காவலர் கலைஞர் 2. கலைஞரின் எழுதுகோல் 3. கலைஞரின் தமிழ்த்தொண்டு ஆகிய தலைப்புகளில் போட்டிகள் நடத்தப்படவுள்ளது.

மேலும், மாவட்ட அளவில் நடத்தப் பெறும் இப்போட்டியில் பங்குபெற்று வெற்றி பெறும் பள்ளி, கல்லூரி மாணாக்கர்களுக்கு தனித்தனியே முதல் பரிசாக ரூ.5,000/மும், இரண்டாம் பரிசாக ரூ.3,000/மும், மூன்றாம் பரிசாக ரூ.2,000/மும் வழங்கப்படவுள்ளது. அத்துடன் பள்ளி மாணாக்கர்களுக்கான பேச்சுப்போட்டியில் பங்கேற்கும் மாணாக்கர்களுள் அரசு பள்ளி மாணாக்கர்கள் இருவரை மட்டும் தெரிவு செய்து, அவர்கள் ஒவ்வொருவருக்கும் சிறப்பு பரிசுத்தொகையாக தலா ரூ.2,000/மும், வழங்கப்படவுள்ளது.

சிவகங்கை மாவட்டத்தில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்கள் (ஒவ்வொரு பள்ளி, கல்லூரியிலிருந்து ஒருவர் மட்டும்) இப்பேச்சுப்போட்டியில் பங்கேற்கலாம். மேலும், போட்டி நேரத்தில் மாணாக்கர்களுக்கு குலுக்கல் முறையில் தலைப்பு ஒதுக்கீடு செய்யப்படும். மாணாக் கர்கள் அத்தலைப்பிலேயே பேசுதல் வேண்டும். எந்தத்தலைப்பு வரப்பெற்றாலும் பேசுவதற்கு ஏற்றவாறு, அனைத்து தலைப்புகளிலும் பேசுவதற்கு மாணாக்கர்கள் தயார் செய்து கொள்ள வேண்டும்.

மேலும், போட்டிகள் குறித்த விரிவான விதிமுறைகள் மற்றும் பங்கேற்புப் படிவம் ஆகியவை பள்ளிகளுக்கு முதன்மைக்கல்வி அலுவலர் வாயிலாகவும், கல்லூரிகளுக்கு தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் / கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் வாயிலாகவும் தெரிவிக்கப்படும். இப்போட்டியில் பங்கேற்கும் பள்ளி, கல்லூரி மாணாக்கர்கள் பள்ளித் தலைமையாசிரியர், கல்லூரி முதல்வரிடம் பங்கேற்புப் படிவத்தில் ஒப்பம் பெற்று போட்டி நாளன்று, தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநரிடம் நேரில் அளித்திடல் வேண்டும்.

மேற்குறிப்பிட்டுள்ள போட்டிகள் தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் செயல்பட்டு வரும் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகத்தை நேரிலோ அல்லது 04575241487 என்ற தொலைபேசி எண்ணிலோ அல்லது tamilvalar-chithurai2014@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியின் வாயிலாகவோ தொடர்பு கொண்டு விபரங்கள் பெறலாம். எனவே, மாணாக்கர்கள் இவ்வாய்ப்பினை பயன்படுத்தி கொண்டு, மேற்கண்ட போட்டிகளில் பங்கேற்று பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 23,124 கன அடியாக சரிவு

சேலம், ஜூலை.04-

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 25,500 கன அடியில் இருந்து 23,124 கன அடியாக சரிந்துள்ளது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் 119.91 அடியாகவும் நீர் இருப்பு 93.32 டிஎம்சியாகவும் உள்ளது. மேட்டூர் அணையில் இருந்து மொத்தமாக 23,799 கனஅடியாக நீர் வெளியேற்றப்படுகிறது.

டெல்டா பாசனத்துக்கு 22,067 கன அடியும், 16 கண் மதகு வழியாக 1,732 கனஅடி நீரும் வெளியேற்றப்பட்டு வருகிறது. மேட்டூர் அணையின் கிழக்கு, மேற்கு கால்வாய் வழியாக விநாடிக்கு 500 கனஅடி நீரும் வெளியேற்றப்பட்டு வருகிறது.

# ஒரு கோடி பங்குச் சந்தை முதலீட்டாளர்களை கடந்த 3வது மாநிலம் குஜராத்




மும்பை, ஜூலை.04-

மகாராஷ்டிரா, உத்தரப்பிரதேசத்திற்கு அடுத்ததாக 1 கோடி பங்குச் சந்தை முதலீட்டாளர்களைக் கடந்த மூன்றாவது இந்திய மாநிலமாக குஜராத் உருவெடுத்துள்ளதாக தேசிய பங்குச் சந்தை தெரிவித்துள்ளது.

இந்தியாவில் பங்குச் சந்தைகளில் சேருபவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இந்நிலையில், பங்குச் சந்தைகளில் பதிவு செய்யப்பட்ட முதலீட்டாளர்களின் எண்ணிக்கையில் 1 கோடியைத் தாண்டிய மூன்றாவது இந்திய மாநிலமாக குஜராத் மாறியுள்ளது என்று தேசிய பங்குச் சந்தை (NSE) வெளியிட்டுள்ள சமீபத்திய தரவுகள் தெரிவிக்கின்றன.

“ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாக, மகாராஷ்டிரா மற்றும் உத்தரபிரதேசத்துக்கு அடுத்ததாக 1 கோடி முதலீட்டாளர்களைக் கடந்த மூன்றாவது மாநிலமாக குஜராத் மாறியுள்ளது” என்று என்எஸ்இ தெரிவித்துள்ளது.இந்த மூன்று மாநிலங்களும் சேர்ந்து, நாட்டின் மொத்த முதலீட்டாளர்களில் 36 சதவீதத்தைக் கொண்டுள்ளன. மே 2025 நிலவரப்படி, இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட முதலீட்டாளர்களின் மொத்த எண்ணிக்கை 11.5 கோடியை நெருங்கிவிட்டதாக என்எஸ்இ தெரிவித்துள்ளது.

பிராந்திய வாரியாக, வட இந்தியா 4.2 கோடி பதிவு செய்யப்பட்ட முதலீட்டாளர்களுடன் தொடர்ந்து முன்னிலை வகிக்கிறது. அதைத் தொடர்ந்து மேற்கு இந்தியா 3.5 கோடியுடன் இரண்டாவது இடத்திலும், 2.4 கோடி முதலீட்டாளர்களுடன் தென்னிந்தியா 3வது இடத்திலும், 1.4 கோடி முதலீட்டாளர்களுடன் கிழக்கு இந்தியா 4வது இடத்திலும் உள்ளன.

கடந்த 12 மாதங்களில் வட மாநிலங்களின் வளர்ச்சி 24% மும், கிழக்கு மாநிலங்களின் வளர்ச்சி 23% மும், தென் மாநிலங்களின் வளர்ச்சி 22% மும் பதிவாகியுள்ளது. அதே நேரத்தில் மேற்கு இந்தியாவின் வளர்ச்சி 17% ஆக உள்ளது.

பிப்ரவரி 2024ல் பங்குச் சந்தை முதலீட்டாளர்களின் எண்ணிக்கை 9 கோடியாக இருந்தது. அதன்பிறகு, ஒவ்வொரு ஐந்து முதல் ஆறு மாதங்களில் ஒரு கோடி முதலீட்டாளர்கள் பங்குச் சந்தைகளில் இணைந்தனர். இதன் காரணமாக, ஆகஸ்ட் 2024ல் 10 கோடியையும், ஜனவரி 2025ல் 11 கோடியையும் எட்டியுள்ளது.

# 20.10.2016 அன்று அல்லது அதற்கு முன்னர் அமைக்கப்பட்ட மனைப்பிரிவுகள் மற்றும் அனுமதியற்ற மனைப்பிரிவுகளை வரன் முறைப்படுத்த குறிப்பிட்டுள்ள இணையதள முகவரியின் வாயிலாக விண்ணப்பித்து பயன்பெறலாம்

## மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, தகவல்


சிவகங்கை, ஜூலை.04-

2025-2026 ஆம் ஆண்டிற்கான சட்டப்பேரவை மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களால், அறிவிப்பு எண்.5ல் “20.10.2016க்கு முன் அமைக்கப்பட்ட அனுமதியற்ற மனைப்பிரிவுகளில், மேற்கண்ட தேதிக்கு முன் பதிவு செய்யப்பட்ட தனிமனைகளுக்கு எந்த காலக்கெடுவும் இல்லாமல் மனு பெறப்பட்டு வரன்முறை செய்து கொடுக்கப்படும்” என அறிவிக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து, தனிமனையாக வாங்கிய பொதுமக்கள் பயன்பெறும் வகையில், தற்சமயம் முதல் onlineppa.tn.gov.in என்ற இணைய முகவரியின் வாயிலாக விண்ணப்பங்களை பதிவு செய்து கொள்ளலாம்.

மேலும், அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்தும் திட்டத்தின் கீழ், 20.10.2016 அன்று அல்லது அதற்கு முன்னர் அமைக்கப்பட்ட மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்த, ஏற்கனவே வெளியிடப்பட்ட அரசாணைகளில் குறிப்பிடப்பட்ட விதிகளுக்குட்பட்டு எவ்வித மாற்றமும் இல்லாமல், வருகின்ற 30.06.2026 வரை விண்ணப்பிக்க கால நீட்டிப்பு செய்து கடந்த 15.05.2025 அன்று வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அரசாணை எண்.70ல் உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே, இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தற்சமயம் முதல் www.tcponline.tn.gov.in என்ற இணையதள முகவரியில் விண்ணப்பங்களை பதிவு செய்து கொள்ளலாம்.

இதேபோன்று, மலையிடப் பகுதிகளில் உள்ள அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளை வரன் முறைப்படுத்துவதற்கான விண்ணப்பங்களை www.tnhillarealayoutreg.in என்ற இணையதளத்திற்கு பதிலாக, www.tcp-online.tn.gov.in என்ற இணையதளத்தின் வாயிலாக வருகின்ற 30.11.2025 ஆம் தேதிக்குள் பதிவு செய்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.

# எந்த வழக்காக இருந்தாலும் பரவாயில்லை குற்றவாளிகளை தேவையின்றி இரவில் ஸ்டேஷனுக்கு கொண்டு வர வேண்டாம்: போலீசாருக்கு பறந்த புதிய உத்தரவு




சென்னை, ஜூலை.04-

எந்த வழக்காக இருந்தாலும் தேவையில்லாமல் குற்றவாளிகளை இரவு நேரத்தில் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து கஸ்டடி வைக்க வேண்டாம் என்றும், நேராக மருத்துவ பரிசோதனை செய்ய வேண்டும் என்றும் அனைத்து போலீசாருக்கும் உயர் அதிகாரிகள் புதிய உத்தரவுகளை பிறப்பித்துள்ளனர். சிவகங்கை மாவட்டம், திருபுவனத்தில் கோயில் வளாகத்தில் தனிப்படையினர் நடத்திய விசாரணையின் போது அஜித்குமார் என்ற வாலிபர் உயிரிழந்தார். இந்த சம்பவம் தமிழகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இனி இதுபோன்ற சம்பவங்கள் நடக்க கூடாது என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவுப்படி காவல்துறை டிஜிபி அனைத்து மாவட்ட எஸ்பிக்கள் மற்றும் அனைத்து போலீஸ் கமிஷனர்களுக்கும் தனிப்படைகளை கலைக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து அவசர உத்தரவு பிறப்பித்துள்ளார்.

டிஜிபியின் உத்தரவை தொடர்ந்து, காவல்துறை உயர் அதிகாரி ஒருவர், தனது காவல் கட்டுப்பாட்டு எல்லையில் உள்ள உதவி கமிஷனர்கள், இன்ஸ்பெக்டர்கள், உதவி ஆய்வாளர்கள் மற்றும் அனைத்து காவலர்களுக்கும் மைக் மூலம் பிறப்பித்த உத்தரவில் கூறியிருப்பதாவது: மைக் 3 ஆல் ஆபீசர்ஸ்ஞ். உங்கள் எல்லாருக்கும் தெரியும். இப்ப என்ன பரபரப்பா போயிட்டு இருக்கு என்று எல்லோருக்கும் தெரியும். ஏற்கனவே உங்களுக்கு நிறைய உத்தரவுகள் சொல்லி இருந்தேன். முக்கியமாக இரவு 7 மணிக்கு மேல் கஸ்டடி இருக்க கூடாது. அதேபோல் ஸ்பெஷல் டீம் யாரை பிடித்தாலும் அந்த உதவி கமிஷனர் கவனத்திற்கு செல்லாமல் பிடிக்க கூடாது. நீங்கள் பார்த்தீங்க, இப்போ அந்த டிஎஸ்பி சஸ்பெண்ட் மற்ற போலீசார் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். வழக்கும் சிபிஐக்கு மாற்றப்பட்டுள்ளது.

இந்த நேரத்தில் உடல் ரீதியான தாக்குதல் எதுவும் இருக்க கூடாது. ஏதாவது ஒரு வழக்கில் தனிப்படைகள் அமைக்க வேண்டும் என்றால், சம்பந்தப்பட்ட உதவி கமிஷனர் மற்றும் துணை கமிஷனர் பரிந்துரை இருக்க வேண்டும். இல்லை என்றால் காவல் நிலையத்தில் உங்களது வழக்கமான பணிகளை தான் செய்ய வேண்டும். நான் துணை கமிஷனர் ஸ்பெஷல் டீம்ஞ்.. நான் உதவி கமிஷனர் ஸ்பெஷல் டீம்ஞ். கமிஷனர் ஸ்பெஷல் டீம் என்று இனி யாரும் எங்கும் போக முடியாது. ஏதாவது ஒரு வழக்கில் கண்டுபிடிக்க வேண்டும் என்றால் நடைமுறை உத்தரவுகளை கடைபிடிக்க வேண்டும். அதன் பிறகு தான் ஸ்பெஷல் டீம் அமைக்க வேண்டும்.

இதுவரைக்கும் அங்கீகரிக்கப்பட்டாத தனிப்படைகள் அனைத்தும் கலைக்கப்படுகிறது. அந்த ஸ்பெஷல் டீமில் இருந்த அனைவரும் காவல்நிலையத்திற்கு சென்று பணிகளை பார்க்க வேண்டும். ஏதாவது வழக்கில் கண்டுபிடிக்க வேண்டும் என்றால் நீங்கள் மீண்டும் ஸ்பெஷல் டீமில் இணையுங்கள். அதேபோல் ஸ்பெஷல் டீம் யாரை பிடிக்கிறீர்கள். யாரை விசாரிக்கிறிர்கள் என்று அனைத்து உதவி கமிஷனர் கவனத்துடன் தான் நடக்க வேண்டும். உதவி கமிஷனர்கள் தான் அவர்கள் காவல் எல்லையில் நடக்கும் அனைத்துக்கும் முழு பொறுப்பு. இன்ஸ்பெக்டர்கள் பார்த்துக்கொள்வார்கள். க்ரைம் டீம் தான் பார்த்துக்கொள்ளும் என்று சொல்லி போக கூடாது. கஸ்டடி என்று இருந்தால் கண்டிப்பாக இன்ஸ்பெக்டர் காவல் நிலையத்தில் இருக்க வேண்டும்.

அதேபோல் வயதானவர்கள், பெண்கள், குழந்தைகள் யாரையும் சூரியன் மறைவுக்கு பிறகு காவல் நிலையம் அழைத்து வர கூடாது. ரொம்ப முக்கியம்ஞ். அழைத்து வர வேண்டும் என்றால் அவர்களை மருத்துவமனைக்கு அழைத்து செல்லுங்கள். அங்கு அவர்களின் உடல் நிலையை பரிசோதிக்க வேண்டும். குடிபோதையில் உள்ள நபர்களை கண்டிப்பாக காவல் நிலையத்திற்கு அழைத்து வர கூடாது. போலீசாரிடம் தகராறு செய்பவர்களை காவல் நிலையத்திற்கு கொண்டு வரகூடாது. பொதுமக்கள் யாரையாவது பிடித்து அடித்தால் அந்த நபரை காவல்நிலையத்திற்கு அழைத்து வர கூடாது. இவர்கள் அனைவரையும் நேராக மருத்துவமனைக்கு அழைத்து சென்று மருத்துவ பரிசோதனை செய்ய வேண்டும்.

உங்களை யாரும் கட்டாயப்படுத்துவது இல்லை. அதனால் போலீசார் கஸ்டடியில் கவனம் செலுத்த வேண்டாம். விசாரணை எல்லாம் அறிவியல் ரீதியாக விசாரியுங்கள். யார் எந்த பதற்றத்தில் இருக்கிறார்கள் என்று நமக்கு தெரியாது. அவர்கள் உடலில் என்ன நோய்கள் இருக்கிறது என்று நமக்கு தெரியாது. இந்த விஷயத்தில் அரசு கண்டிப்புடன் கவனம் செலுத்தியுள்ளது. நீங்கள் எல்லாம் பார்த்து இருப்பீர்கள். எனவே தேவையில்லாமல் யாரையும் காவல் நிலையத்தில் வைத்து விசாரிக்க வேண்டாம். காவல் நிலையத்திற்கு கொண்டு வரவே வேண்டாம். எல்லாம் வழக்குகளிலும் நீங்கள் கைது செய்கிறீர்களோ இல்லையோ கண்டிப்பாக 49(எ) கொடுத்து இருக்கணும்.

இதை அனைவரும் பின்பற்ற வேண்டும். தற்போது புதிய சட்டப்படி பிஎன்எஸ்எஸ் 35 கண்டிப்பாக நோட்டீஸ் கொடுக்கணும். அது எந்த வழக்கு இருந்தாலும் சரி.. அவர்கள் ஆஜராகிறார்கள் அல்லது இல்லையோ கண்டிப்பாக நோட்டீஸ் கொடுக்க வேண்டும். அவர்கள் வக்கீலுடன் நேரில் ஆஜராகட்டும். அதுபற்றி நமக்கு ஒன்றும் இல்லை. அதேபோல், கைது நடவடிக்கை 6 மணிக்குள் முடித்துவிட்டு 7 மணிக்குள் ரிமாண்ட் செய்ய வேண்டும். காவல் நிலையத்தில் கஸ்டடி வைக்க வேண்டாம். இரவு நேரத்தில் யாராவது அடித்து கொண்டாலும் காவல் நிலையத்திற்கு அழைத்து வர கூடாது.

நேராக மருத்துவ மனைக்கு அழைத்து செல்லுங்கள். குடிபோதையில் போலீசாரிடம் தகராறு செய்கிறானோ ‘நோ’ நேராக மருத்துவமனையில் அனுமதியுங்கள். எல்லாம் காலையில் பார்த்துக்கொள்ளலாம். இரவு நேரத்தில் தேவையில்லாமல் குற்றவாளிகளை காவல் நிலையத்திற்கு கொண்டு வர வேண்டாம். அதேபோல் குற்றவாளிகளை எப்படி நடத்த வேண்டும் என்று மீட்டிங்கில் சொல்லி இருக்கேன். அதை முறையாக பின்பற்ற வேண்டும். அதில் எந்தவித மாற்று கருத்துகளும் இருக்க கூடாது. இவ்வாறு உயர் அதிகாரி ஒருவர் அனைத்து போலீசாருக்கும் உத்தரவு பிறப்பிக்கும் காணொளி வைரலாகி வருகிறது.



# தென்காசி மாவட்டத்தில் மாவட்ட அளவிலான பேச்சுப்போட்டி நடைபெற்றது

தென்காசி, ஜூலை.04-

தென்காசி மாவட்ட தமிழ் வளர்ச்சி துறை சார்பில், மாவட்ட அளவிலான பேச்சு போட்டி 6 ஆம் வகுப்பு முதல் 12 வது வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு இடையே நடைபெற்றது. இதில் நெடுவயல் ஸ்ரீ சிவசைலநாத நடுநிலைப் பள்ளி 8 வது வகுப்பு மாணவன் நவீன், முதல் இடம் பிடித்தார். வெற்றி பெற்ற மாணவனுக்கு தென்காசி மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி திருமதி ரெஜினி பாராட்டு சான்றிதழ் மற்றும் 5000 ரூபாய்க்கான காசோலையும் வழங்கினார். வெற்றி பெற்ற மாணவனையும் பயிற்சி அளித்த ஆசிரியர் பிரபாகரன் அவர்களையும் அதற்க்கு உறுதுணையாக இருந்த ஆசிரியர் சாந்தி ஆகியோரை பள்ளி தாளாளர் கணேஷ்ராம், செயலர் தம்புசாமி, பள்ளி குழு உறுப்பினர் மணிகண்டன், தலைமை ஆசிரியர் சுதாநந்தினி மற்றும் ஆசிரியர்கள் பாராட்டினர். பள்ளி சார்பாக மாணவர்க்கு பரிசு வழங்கப்பட்டது.



■ சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் மடப்புரம் காளியம்மன் கோவிலில் காவலாளியாக இருந்த அஜித்குமார் என்பவரை காவல் துறையினர் அடித்து கொலை செய்தனர். இது பற்றி தகவல் அறிந்த நம்முடைய கால்நடை வளர்ப்போர் பாதுகாப்பு சங்கத்தின் மாநில பொது செயலாளர் வழக்கறிஞர் சத்தியம் சரவணன், முகவை முத்துசாமி, கணேசன், சந்த வலியான், வேலு, சசிகுமார், தர்மலிங்கம், தஞ்சை ராஜபாண்டி, சிறுத்தை கிருஷ்ணன், சைலண்ட் சாத்தையா, குருவை அன்னக்கொடி, லிங்கம், திருநாவுக்கரசு, பம்பரம் கணேசன், கந்தவேல் முத்துக்குமார், சேது ராஜா, வீரபிரபு, ஒய்யப்பன் மற்றும் பலர் அஜித் குமார் இல்லத்திற்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தி குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினர்.




■ கழகத் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஓரணியில் தமிழ்நாடு என்ற முழக்கத்தை முன்வைத்து தொடங்கி வைத்துள்ள கழக உறுப்பினர் சேர்க்கை நிகழ்ச்சியை காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் பம்மல் தெற்கு பகுதி 12வது வட்டத்தில் 393வது பாகத்தில் மாவட்ட கழகத்தால் அறிவித்த பொறுப்பாளர் கழக தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் அ.தமிழ்மாறன், பம்மல் தெற்கு பகுதி கழக செயலாளர் தாம்பரம் மாநகராட்சி 1வது மண்டலம் குழுத்தலைவர் வே.கருணாநிதி அவர்களும் வீடு வீடாகச் சென்று படிவம் மற்றும் மக்களுடன் ஸ்டாலின் APP வழியாக துவக்கி வைத்தார்கள். மேலும் 12வது வார்டு மாமன்ற உறுப்பினர் சத்யா மதியழகன், 12வது வட்டக் கழக செயலாளர் பி.ஶ்ரீதர்,, பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட, மாநகர, பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழகத் நிர்வாகிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



■ ஈரோடு முதன்மை மாவட்ட நீதிபதி எஸ். சமீனா ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், அரசு மருத்துவமனை அருகில் ஐந்து நீதிமன்றங்கள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் மற்றும் ஐந்து நீதித்துறை அலுவலர்களின் குடியிருப்புக் கட்டடம் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டினார். உடன் கோபிச்செட்டிபாளையம் சார் ஆட்சியர் எஸ்.சிவானந்தம், வனத்துறை துணை இயக்குநர் குலால் யோகேஷ் விலாஸ் உட்பட பலர் உள்ளனர்.



# பழனியில் மாநில உறுப்பினருக்கு நம்பிக்கை சிறகுகள் அறக்கட்டளை சார்பாக வாழ்த்து

திண்டுக்கல், ஜூலை.04-

திண்டுக்கல் மாவட்டம் பழனியைச் சேர்ந்த ஜெயசுதா என்பவர் சென்னை தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டார்.

இதனையடுத்து தமிழ்நாடு குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் உறுப்பினராக பதவியேற்ற ஜெயசுதாவிற்கு நம்பிக்கை சிறகுகள் அறக்கட்டளை சார்பாக தலைவர் ரமேஷ் மாரிமுத்து தலைமையில் நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டு ஜெயசுதாவை நேரில் சந்தித்து தங்களது வாழ்த்துக்களை தெரிவித்து நினைவு பரிசினை வழங்கினர்.

மேலும் இந்நிகழ்வில் மாநிலத் துணைத் தலைவர் மெக்கானிக் பாலசுப்பிரமணி மாவட்ட செயலாளர் கோல்டன் பாலு மாவட்ட பொருளாளர் மணிகண்டன் ரங்கராஜன் கனரா வங்கி முன்னாள் மேனேஜர் பழனிச்சாமி நகர செயலாளர் ஜோதி சண்முகம் தெய்வீக விலாஸ் சந்தோஷ் குமார், கணேஷ் ராம், ஐயப்பன், குமரவேல், மாதேஷ், ஜான்சன், பிரபு, மகளிர் அணி தலைவி பிரேமலதா மாவட்ட செயலாளர் சாந்தி, வசந்தா, சித்ரா மாரிமுத்து, சுதா, பரமேஸ்வரி, கோகிலவாணி, கிருஷ்ணவேணி, ஐஸ்வர்யா உள்ளிட்ட நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டு தமிழ்நாடு குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் உறுப்பினராக தேர்வு செய்யப்பட்ட ஜெயசுதாவிற்கு தங்கள் வாழ்த்துக்களை தெரிவித்தனர்...

# ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம் பயறு வகை விதைத் தொகுப்பு திட்டத்தில் பயறு வகை விதைகள் அடங்கிய தொகுப்பு 100 சதவீதம் மானியத்தில் வழங்கப்படவுள்ளது


## மாவட்ட ஆட்சித்தலைவர் செ.சரவணன் தகவல்

திண்டுக்கல், ஜூலை.04-

மாண்புமிகு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 15.03.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் வெளியிடப்பட்ட 2025-26ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம் பயறு வகை விதைத் தொகுப்பு திட்டத்தில் புரதச்சத்து நிறைந்த மரத்துவரை, காராமணி உள்ளிட்ட பயறு வகைகளை இல்லந்தோறும் வளர்க்கும் பொருட்டு பயறு வகை விதைகள் அடங்கிய தொகுப்பு 100 சதவீதம் மானியத்தில் வேளாண் துறையின் மூலம் வழங்கப்படவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், இல்லத்தில் தோட்டத்தில் விதைப்பு செய்ய ஏதுவாக இடம் உள்ளவர்கள், உழவர் செயலியில் பதிவேற்றம் செய்தவர்கள், பெண்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடும்பங்கள் பயனடையலாம்.

இத்திட்டம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 04.07.2025 அன்று தொடங்கி வைக்கப்பட உள்ளது. அதனைத் தொடர்ந்து திண்டுக்கல் மாவட்டத்திலும் 2000 பயனாளிக்கு வழங்க இலக்கீடு வரப்பெற்றுள்ளதைத் தொடர்ந்து, இத்திட்டத்தின் கீழ் பயனடைய தங்கள் வட்டார வேளாண் விரிவாக்க மையங்களில் ஆதார் நகல் கொடுத்து முழு மானியம் பெற்று பயன்பெறலாம், என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.சரவணன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.



# புதிதாக கட்டப்பட்டுள்ள நகர்ப்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற நலவாழ்வு மையங்களை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கும் நிகழ்ச்சி

இராமநாதபுரம், ஜூலை.04-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மருத்துவம் மற்றும் மக்கள் நலவாழ்வுத்துறை சார்பில் மாநகராட்சி மற்றும் நகராட்சிக்குட்பட்ட புதிதாக கட்டப்பட்டுள்ள நகர்ப்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற நலவாழ்வு மையங்களை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இராமநாதபுரம் நகராட்சி, பாத்திமா நகர் பகுதியில் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட நகர்ப்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தையும், இராமேஸ்வரம் நகராட்சி நடராஜபுரம் பகுதியில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட நகர்ப்புற நலவாழ்வு மைய கட்டடத்தையும் காணொளிக்காட்சியின் மூலம் திறந்து வைத்தார்கள்.

அதனையொட்டி இராமநாதபுரம் நகராட்சி, பாத்திமா நகர் பகுதியில் உள்ள நகர்ப்புற அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டடத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன், , இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.காதர் பாட்சா முத்துராமலிங்கம் ஆகியோர் சென்று புதிதாக கட்டப்பட்ட நகர்ப்புற அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டடத்தில் குத்துவிளக்கேற்றி வைத்து மருத்துவமனை வளாகத்தில் உள்ள உட்கட்டமைப்புகளை பார்வையிட்டார்கள்.

இந்நிகழ்ச்சியில் பொதுசுகாதாரத்துறை மருத்துவ அலுவலர் மரு.அர்ஜுன்குமார், இராம நாதபுரம் நகர் மன்றத்தலைவர் ஆர்.கே. கார்மேகம் அவர்கள், இராமநாதபுரம் நகர் மன்ற துணைத்தலைவர் திரு.டி.ஆர்.பிரவீன் தங்கம் அவர்கள், நகராட்சி ஆணையாளர் திருமதி. அஜிதாபர்வின் அவர்கள், நகர்நல அலுவலர் மரு.ரத்தினகுமார் அவர்கள், வட்டார மருத்துவ அலுவலர் மரு.ஜென்னத் யாஸ்மின் அவர்கள், நகர்மன்ற உறுப்பினர் திருமதி.கயல்விழி அவர்கள் மற்றும் மருத்துவ அலுவலர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# புதிய ஊராட்சிமன்ற அலுவலகக் கட்டடத்தினை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்தார்

புதுக்கோட்டை, ஜூலை.04-

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், குழந்தை விநாயகர் கோட்டை ஊராட்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், ரூ.30 இலட்சம் செலவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஊராட்சிமன்ற அலுவலகக் கட்டடத்தினை, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன்) திறந்து வைத்தார்.




பின்னர் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கிராமப் பகுதிகளை முன்னேற்றிடும் வகையில் எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில், ஊரகப் பகுதிகளுக்கு தேவையான, சாலை வசதி, குடிநீர் வசதி, சுகாதார வசதி, மின் வசதி உள்ளிட்ட அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதன்படி இன்றைய தினம் புதிய ஊராட்சிமன்ற அலுவலகக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த அலுவலகத்திற்க வருகை தரும் பொதுமக்களின் வசதிக்காகவும், அரசுப் பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் நல்ல காற்றோட்டமான அலுவலக சூழலில் பணியாற்ற ஏதுவாகவும் கட்டப்பட்டுள்ளது. இவ்வலுவலகத்தினை பொதுமக்கள் மற்றும் அரசுப் பணியாளர்கள் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

எனவே, தமிழக அரசின் மூலம் செயல்படுத்தப்படும் இதுபோன்ற திட்டங்களை பொதுமக்கள் அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக்கொண்டு, தங்களது வாழ்வாதாரத்தினை மேம்படுத்திட வேண்டும் எனவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், திருவரங்குளம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.ஜி.முத்துராமன், திரு.கே.ரமேஷ் மற்றும் திரு.தங்கமணி மற்றும் அரசு அலுவலர்கள் பலர்; கலந்துகொண்டனர்.

# ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம் காய்கறி விதைகள் அடங்கிய தொகுப்பு மற்றும் பழச்செடிகள் அடங்கிய தொகுப்பு 100 சதவீதம் மானியத்தில் வழங்கப்படவுள்ளது

## மாவட்ட ஆட்சித்தலைவர் செ.சரவணன் தகவல்

திண்டுக்கல், ஜூலை.04-

திண்டுக்கல் மாவட்டத்தில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் கீழ், 2025-26ஆம் நிதியாண்டில் மக்களின் உடல் நலம் மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு ஊட்டச் சத்து வேளாண்மை இயக்கம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஜூலை 4ஆம் தேதி தொடங்கப்படவுள்ளது.

இத்திட்டத்தில் மக்களின் அன்றாட காய்கறித் தேவைகளை நிறைவு செய்யவும், வீட்டுத்தோட்டங்களில் காய்கறிகள் வளர்ப்பதை ஊக்குவிக்கும் விதமாகவும் தக்காளி, கத்தரி, வெண்டை, மிளகாய், கொத்தவரை, கீரை வகைகள் போன்ற ஆறு வகையான காய்கறி விதைகள் அடங்கிய தொகுப்பு 100 சதவீதம் மானியத்திலும், நகர்ப்புறங்களிலும் கிராமப்புறங்களிலும் வசிக்கும் மக்களின் ஊட்டச்சத்துப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக விரைவில் பலனளிக்கும் பப்பாளி, கொய்யா, எலுமிச்சை ஆகிய மூன்று வகையான பழச்செடிகள் அடங்கிய பழச்செடி தொகுப்பு 100 சதவீதமானியத்திலும் வழங்கப்படவுள்ளது. ஒரு பயனாளி அதிகபட்சமாக 2 தொகுப்பு வரை பெறலாம். இத்திட்டத்தில் பயன்பெற Android மொபைல்களில் UZHAVAR செயலி மூலமாகவும் அல்லது https:tnhorticulture.tn.gov.in/kit என்ற வலைதளத்திலும் ஆதார் எண், குடும்ப அட்டை நகல் போன்ற ஆவணங்கள் கொண்டு பதிவு செய்து பயன் பெறலாம். மேலும், அந்தந்த வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகங்களை தொடர்பு கொண்டு இத்திட்டத்தில் பயன்பெறலாம், என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.சரவணன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161